Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா : 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 16 (02 - 10 - 1991) புதன்கிழமை ஓசை: 226

## இலவச பாட நூல்களுக்கான செலவீட்டில் வெட்டு

இலவச பாட நூல்களுக்கு அரசாங்கம் செலவழிக்கும் தொகை மட்டுப்படுத்தப்படவுள்ளது. பாட நூல்களுக்கு வருடாந்தம் செலவு செய்யும் தொகையை மட்டுப்படுத்த வேண்டியிருப்பதால், பாட நூல்களின் அளவை மாணவர் தொகைக்கேற்ப மாத்திரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களங்களில் பதிவு செய்யுமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் ஈடவிதானப் பிரிவு கோரியுள்ளது. பிழையான தரவுகளைக் கொடுத்து மேலதிகமான இலவச பாட நூல்களைப் பெறுவது தண்டனைக்குரிய குற்றம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் திருப்திகரமான முறைகளில் நூல்களைப் பாவிக்குமாறும், நூல்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். எம். பிக்களின் நியமனம்;

# தலைவர் பிரபாவின் மதிநுட்பம்

## கொழும்பு அரசியல் விமர்சகர்கள் கருத்து

(கொழும்பு)

சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இவ வேளையில் யாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பதுபேர்களை பாராளுமன்றம் அனுப்ப விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன் மேற்கொண்ட முடிவு அவரது அரசியல் விவேகத்தையும், மதி நுட்பத்தையும் காட்டும் ஒரு செயலாகும். இவ்வாறு கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டதாக கொழும்புவாராந்தப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அவதானித்துக் கொண்டு மாத்திரம் இருக்கவில்லை. அவர் மதிநுட்பமாகச் செயற்பட்டு அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றியும் தீர்மானித்துச் செயற்பட்டார் என்று கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஒரு இராணுவ அல்லது பயங்கர



வாத அமைப்பு என்ற வகையிலேயே சிறிலங்கா அரசு இதுவரை அனுகி வந்தது.

## யாழ். எம்பிகள் வருகை

## பிரதமர் நரசிம்மராவ் தூதுவர் ஜா சந்திப்பு

சிறிலங்காவிற்கான இந்திய உயர் ஸ்தானிகர் எஸ். என் ஜா நேற்றுப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைப் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

சிறிலங்காவின் அரசியல் நிலை குறித்தும் கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாடு பற்றியும் ஜா பிரதமருடன் ஆலோசனை கலந்ததாக இந்திய வெளி விவகார

(4ஆம் பக்கம் பார்க்க)

## 21 இந்திய மீனவர்களும் நாளை ஒப்படைக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள இந்திய மீனவர்களை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் பொறுப்பேற்கவுள்ளது. சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் இம் மீனவர்களை இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைப்பதற்காக கொழும்புக்கு அழைத்துச்செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. நாளை வியாழக்கிழமை இம் மீனவர்கள் கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு அழைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

சர்வோதயத்திற்கான

## வெளிநாடுகளின் உதவியை நிறுத்த அரசு தீவிரமுயற்சி

(கொழும்பு)

சர்வோதய இயக்கத்திற்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளை நிறுத்துவதற்கு அரசதரப்பிலிருந்து பகீரத முயற்சி செய்யப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

சர்வோதய இயக்கத்தில் ஊழல், மோசடி போன்றவை நடாத்தப்படுவதாகவும், இவ் இயக்கம் அரசிற்கு எதிராகவும் சில சமயங்களில் இயங்கி வருவதும் தெரிய வந்ததை அடுத்து மேற்படி முயற்சி

பொலிசார் சேவையில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ச)

இலங்கை வங்கியின் கண்டதும்

## பணம் கொடுக்கும் கட்டளைத் திட்டம்

(கொழும்பு)

கொடுப்பனவுகளைத் தீர்க்க இலங்கை வங்கி கண்டதும் பணம் கொடுக்கும் கட்டளைத் திட்டத்தை அறிமுகப்

ரூபா 10,000க்கும் மேல் பெறுக் கொள்ளலாம். இதற்கான கட்டணம் ரூபா 10,000க்கும் அதற்குக் குறைந்த தொகைக்கும் ரூபா 25 மட்

கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டதாக கொழும்புவாராந்தப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அவதானித்துக் கொண்டு மாத்திரம் இருக்கவில்லை. அவர் மதிநுட்பமாகச் செயற்பட்டு அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றியும் தீர்மானித்துச் செயற்பட்டார் என்று கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஒரு இராணுவ அல்லது பயங்கரவாத அமைப்பு என்ற வகையிலேயே சிறிலங்கா அரசு இதுவரை அணுகி வந்தது. அதேவேளை இந்திய அதிகார வர்க்கத்தின் சுயகௌரவம் புலிகளின் இராணுவ யுத்திகளையும் அரசியல் விவேகத்தையும் சரியான முறையில் மதிப்பீடு செய்வதற்குத் தடையாகவும் அமைந்திருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. தற்பொழுது புலிகள் எடுத்த நடவடிக்கை அவர்களின் மதிநுட்பத்தைப் புரிய வைத்திருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்துக்கு ஒன்பது உறுப்பினர்களை அனுப்புவதன்மூலம் இந்தியாவின் அரசியல் செல்வாக்கு இலங்கை.

(4ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். எம்பிகள் வருகை

## பிரச்சினையை உருவாக்கும்

### - சிறிமாவோ

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் இத் தருணத்தில் பாராளுமன்றத்திற்கு மீண்டும் வர உத்தேசித்திருப்பது மேலும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாமோ பண்டாரநாயக்க கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் இல்லாமையே இந்த நியமனத்திற்கு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் நியமனம்பெறுவது தமிழ் மக்களை மேலும் பிளவு படுத்த அரசாங்கம் எடுக்கும் மற்றுமொரு முயற்சி என்று ஈ. பி. ஆர். எல். எப் இயக்கம் கொழும்பில் அகில இந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டை நிறுத்த இந்தியா முயற்சி

(கொழும்பு)

சார்க் மாநாட்டை கொழும்பில் நடத்த இலங்கை விரும்புகின்ற போதிலும் பலவிதமான காரணங்களைக் கூறி மாநாடு நடைபெறுவதைத் தடுக்க இந்திய அரசு முயற்சிப்பதாக அரசு சார்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதம் வழங்கியதாக ஒப்புக்கொண்ட பின்னர் இந்தியப் பிரதமருக்கு கொழும்பில் பாதுகாப்பு சரியாக இருக்காது எனக்கூறி இந்தியா சார்க் மாநாடு இலங்கையில் நடைபெறுவதை விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது.

இதனிடையே 'சார்க்' மாநாட்டை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் கொழும்பில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேரணையை எதிர்நோக்க அரசாங்கம் தயார்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சியினரின் எந்தவொரு நடவடிக்கைகளையும் எதிர் நோக்க அரசாங்கம் தயாராகவுள்ளது என நேற்று அறிவித்தது.

எதிர்க் கட்சியினரின் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க அரசாங்க பாராளுமன்றக் குழு ஐக்கியப்பட்டிருப்பதாகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அரசாங்க வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

## இந்தியாவின் உதவியின்றி நாட்டின் ஐக்கியம் பேண முடியாது

### - பிரேமச்சந்திரா

(கேகாலை)

இந்தியாவின் உதவியின்றி நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க முடியாது. இந்தியாவின் உதவியின்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முடியாது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா கூறியுள்ளார். கேகாலை பட்டினசபை பொது வாசிகசாலை மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் பேசுகையில் புத்தபிரான் பிறந்தஇடம் இந்தியா

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை எட்டு மணிமுதல் தளர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நடவடிக்கை தலைமையகம் அறிவித்துள்ளது.

## எறிகணைத் தாக்குதல்

(கட்டுவன்)

குப்பிளான், ஏழாலை ஆகிய பகுதிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் இப்பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதலுடன் துப்பாக்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் இப்பகுதியில்இருந்த பொதுமக்களின் வீடுகள் சில சேதமடைந்தன.

நிறுத்துவதற்கு அரசதரப்பிலிருந்து பகீரத முயற்சி செய்யப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

சர்வோதய இயக்கத்தில் ஊழல், மோசடி போன்றவை நடாத்தப்படுவதாகவும், இவ் இயக்கம் அரசிற்கு எதிராகவும் சில சமயங்களில் இயங்கி வருவதும் தெரிய வந்ததை அடுத்து மேற்படி முயற்சி அரச தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. அத்துடன் இவ் இயக்கத்தின் செயற்பாடுகளை உற்று நோக்குவதற்காக சுமார் 45 இரகசியப்

## பணம் கொடுக்கும் கட்டளைத் திட்டம்

(கொழும்பு)

கொடுப்பனவுகளைத் தீர்க்க இலங்கை வங்கி கண்டதும் பணம் கொடுக்கும் கட்டளைத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இதனைப் பெற்றுக்கொள்பவர்கள் நாட்டின் எந்தக் கிளையிலாவது கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இக் கட்டளை ஒன்றை ரூபா 10,000க்கும் மேல் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கட்டணம் ரூபா 10,000க்கும் அதற்குக் குறைந்த தொகைக்கும் ரூபா 25 மட்டுமேயாகும். ஒரு கட்டளை முப்பது நாட்களுக்குச் செல்லுபடியாகும். இதனை எல்லாப் பிரதம கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## ஏறாவூர் பகுதியில் பலத்த குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்றைச் சூழவுள்ள காட்டுப் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று முன்தினம் முதல் கடும் தாக்குதலைமேற்கொண்டன.

மேலும் பன்குடாவெளி இலுப்படிச்சேனை, கொடுவாமடு ஆகிய பல கிராமங்களை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

### பாலம்போட்டாற்றில்

## சிதறியது கடற்படைவாகனம் 3 பேர்பலி; 6பேர் படுகாயம்

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாலம் போட்டாறு பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த கண்ணி வெடியில் கடற்படையினரின் வாகனம் சிதறியதில் கடற்படையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆறுபேர் காயமடைந்துள்ளனர் என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக் கூறியுள்ளது.

## மீனவர் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

(நல்லூர்)

நேற்று முன்தினம் (30-9-91) தம்பாட்டி கடற்பரப்பில் பாய்ச்சு வலை மூலம் குருநகர் மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் இராணுவம் சுட்டதாகவும் இதன் காரணமாக அவர்கள் தமதுவலைகளை விட்டுவிட்டு உயிரைக் காப்பாற்றயாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததாகவும்மீனவர்கள் தெரிவித்தனர்.

மேற் கூறிய சம்பவத்தில் எதுவித உயிராபத்தும் ஏற்படவில்லை எனவும் தமது பெறுமதிமிக்கவலைகளைமீட்கமுடியாமல் போய் விட்டதாகவும் தம்மை நோக்கி இராணுவம் பல தடவைகள் சுட்டதாகவும் தெய்வாதீனமாகவே தாம் உயிர் தப்பி குருநகரை வந்தடைந்ததாகவும் மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.



## தகவல் தரவும்

(யாழ்ப்பாணம்)

புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சிறி புலிகள் பாதுகாப்பில் இருந்து தப்பி ஓடிவிட்டார். 31 வயதான இவர் கணேசன், சிறிகணேச புனிதன் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறவர். இவர் அநேகமாக சுழிபுரம், உடுவில், இணுவில், குருநகர் ஆகிய பகுதிகளில் நடமாடியவர்.

தகவல் தெரிந்தவர்கள் அல்லது இவரைக் காண்பவர்கள் உங்களுக்கு அருகாமையில் உள்ள விடுதலைப் புலிகள் முகாமில் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

இவரின் உயரம் 5 அடி 4 அங்குலம், நிறம் கறுப்பு, தலைமயிர் படத்திலிருப்பதைவிட சிறிது வளர்ந்துள்ளது, சற்று மெலிந்த தோற்றமுடையவர்

## வரி விளம்பரம்


**ஜீவிதா**

**தொழில் நுட்பக்கூடம்**

ரி. வி, டெக், ரேடியோ, மணிக்கூடு, தையலியந்திரம் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும். வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும். புதிய பழையபாடல்களும் (ஈழப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும், ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (B/3094)


## பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா ஒக்டோபர் 18ஆம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞாபகார்த்தப் பரிசுத் திட்டத்திற்கான நிதிநன்கொடைகள் வரவேற்கப்படுவதாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (24)

## இலவசமாக அரிச்சுவடிகள்

(யாழ்ப்பாணம்)

வித்தியாரம்பத்திற்கு அரிச்சுவடி ஏடுகள் இலவசமாக வழங்கவுள்ளதாக மிக்லைற் தொழிலகம் அறிவித்துள்ளது.

ஆலயங்கள் மற்றும் சபைகள் சங்கங்கள் தேவையான அரிச்சுவடி ஏடுகளை விண்ணப்பித்து மிக்லைற் நிறுவனத்திடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அதன் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

## வீட்டுத் தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் வீட்டுத்தோட்டப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.


பட்டப்படிப்புகள் கல்லூரி தயாரித்து வழங்கும்

மகாகவியின்

**"கோடை"**

(நாடகம்)

நெறியாள்கை : கந்தையா ஸ்ரீகந்தவேள்

காலம்: 6-10-91 ஞாயிறு பி. ப. 2-00 மணி

இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

பிரவேசம்: மாணவர்கள் ரூபா 10/-

ஏனையோர் ரூபா 20/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெளிவாரி மாணவர் ஒன்றியம்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3216)



யாழ்ப்பாணம் சைவசித்தாந்த உயர்நிறுவன நிதி உதவிக்காக

13-10-91இல் யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் இலங்கை வேந்தனின் கதகளி. பரத நாட்டியம், புலவர் முத்து இராசரத்தினத்தின் எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் கண்டி அரசன் முதலிய வரலாற்று நாடக வரிசையில்

**"இலங்கை வேந்தன்"**

(இசை, நடன நாடகம்)




மசூதி இடிக்கப்படாது

# அயோத்தியில் இராமராலயம் கட்ட இந்தியப் பிரதமர் ஆதரவு

(டில்லி)

அயோத்தியாவில் அமைந்துள்ள பாபர் மசூதிக்கு எந்தவொரு பங்கமும் ஏற்படாது இராமர் ஆலயம் கட்டப்பட்டால் அதனை தான் ஆதரிப்பதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இந்திய ஹிந்திவார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் பாபர் மசூதியை இடிக்காது அதன் அருகில் இராமர் கோவில் கட்டுவதற்கு தான் சம்மதிப்பதாக அவர் தெரிவித்தார்.

பஞ்சாப் பிரச்சினையை தீர்க்க ராஜீவ் - லொங்கோவால் உடன்படிக்கை ஒரு அடிப்படையாக விளங்குமென்றும், பஞ்சாப் தேர்தலுக்குப் பின்னர் மாநில அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அடிப்படையாக இது அமையும் என்றும் பி வி நரசிம்மராவ் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதுபோல் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் பி வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

## கன்னியாகுமரி சம்பவத்தில் மேலும் இருவர் பலி!

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக பொலிசார் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் இருவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக ஒருவர் சுட்டுக் இறந்ததாகவும் ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் தமிழக சட்டம் ஒழுங்குத்துறைத் தலைவர் தேவாரம் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

ஆனால் இச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டதாகவும் அதில் இருவர் ஸ்தலத்திலேயே இறந்ததாகவும் ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் நேற்று வெளியான செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரம் பேர் கொண்ட கும்பலொன்று பொலிசாரை கல் வீச்சுக்களால் தாக்கியது என்றும் இதனாலேயே பொலிசார் சுட்டனர் என்றும் பொலிசார் தரப்பில் 23 பேர் காயமடைந்தனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## சமூக மேம்பாட்டு பணியாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு சமூக மேம்பாட்டுப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

3 வாரகாலத்தைக்கொண்ட இப்பயிற்சி நெறிக்கு க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தசமூக சேவைத் திட்

விலகியவரும் வேறு எந்த நிறுவனத்திலும் தற்சமயம் கற்றுக் கொண்டிருக்காதவரும் முறைசாராக் கல்வித் திட்டங்களில் தொழில்திறன் பயின்றவராகவும் எந்த இடத்திலும் சமூக மேம்பாட்டுப் பணி செய்வதற்கு தயாராகவும் உள்ள அனைவரையும் சான்றிதழ் அற்ற இப்பயிற்சித் திட்டத்


## இரத்தம் தேவை

A தொட்டுள்ள இரத்தம் சிறுபிள்ளை ஒன்றிற்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது தயவுசெய்து இந்த குருப் இரத்தம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:

றியோ
கிறீம் ஹவுஸ்
75, கே.கே.எஸ். குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

(B/1794)



## வட - இலங்கை நுண்கலை மன்றம்

1991 பரீட்சை விண்ணப்பங்கள் தாமதக் கட்டணத்தோடு 1991-10-10 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஊ. இ. நு. க. ம:
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

(B/3232)



## உடன் தேவை

இடியப்பம், தோசை, றொட்டி, அப்பம், சிற்றுண்டி வகைகள், பாண், பாண்சார்ந்த பொருள்கள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையற்காரரும் உதவியாளர்களும் உடன் தேவை.

உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

**சுவையருவி**

மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B/ 3231)

விண்ணப்பத்தை ... நிறுவனத்திடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அதன் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

## வீட்டுத் தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் வீட்டுத்தோட்டப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி வீட்டுத் தோட்டப் போட்டி மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும் இதுபற்றிய மேலதிக விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (ச)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்வி போதனாசிரியர்களுக்கான விசேட கூட்டம் நாளை 9.00 மணிக்கும் முறைசாராக்கல்விப் பிரிவுகளில் தொழில்திறன் பயின்று உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு சுயதொழில் செய்ய விரும்புவோருக்கான கூட்டம் பிற்பகல் 1.00 மணிக்கும் யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது என முறைசாரா கல்வி அதிகாரி அறிவித்துள்ளார்.



இராவணனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி

| | |
|---|---|
| சைவப்புலவர் | சித்தாந்த கலாநிதி |
| மு. திருஞானசம்பந்தபிள்ளை | க. கணபதிப்பிள்ளை |
| கௌரவ அதிபர் | கௌரவ அமைப்பாளர் |

(B/3227)

அன்பளிப்பு,

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## பணியாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு சமூக மேம்பாட்டுப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

3 வாரகாலத்தைக்கொண்ட இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தசமூக சேவைத் திட்டங்களை முன்னெடுத்துச்செல்வதில் நாட்டம் உடையவர்களும் பாடசாலையை விட்டு விலகியவரும் வேறு எந்த நிறுவனத்திலும் தற்சமயம் கற்றுக் கொண்டிருக்காதவரும் முறைசாராக் கல்வித் திட்டங்களில் தொழில்திறன் பயின்றவராகவும் எந்த இடத்திலும் சமூக மேம்பாட்டுப் பணி செய்வதற்கு தயாராகவும் உள்ள அனைவரையும் சான்றிதழ் அற்ற இப்பயிற்சித் திட்டத்தில் சேரலாம் என முறைசாரா அதிகாரி அறிவித்துள்ளார்.

## ஆசிரியர் தின நினைவாக மரம் நாட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தினவிழா நினைவாக ஒவ்வொரு ஆசிரியரும் மரம் ஒன்றினை நாட்ட வேண்டும் என யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ் செயலகத்தில் நடைபெற்ற மரவளவிஸ்தரிப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிரியர் தினவிழா அன்று ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு மரத்தினையாவது நடுதல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான மரங்களை வழங்க மில்க்வைற் ஸ்தாபகர் முன் வந்துள்ளார். (ச)

உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

சுவையருவி

மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B/ 3231)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 10 - 02**

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

கெங்கா (ஆனந்தராஜா சுந்தரராஜா - கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

கப்டன் றொபின் (செல்வரெட்ணம் ராஜ்பவான் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை 4 ஆம் கட்டைப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு சிறுப்பிட்டியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளராகிய பல்கலைக்கழக மாணவன் நந்தன்

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் புதுக்குடியிருப்பிற்கும் தாழங்குடாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3228)

புதிய உயர் கல்லூரி

(NEW College of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 91 DAY CLASSES

(சகல பாடங்களுக்குமான மீட்டலும் கடந்த கால வினா - விடையும்)

ஆரம்பம்: — 2 - 10 - 91 இன்று காலை 8 00 மணி

நிர்வாகி: அருள்நங்கை

(B/ 8230)

பாரதிதாசன்

கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 91 DAY CLASSES

மீட்டல் வினாவிடை வகுப்புகள்

பொருளியல்:- திரு. வரதராஜன்

இந்துநாகரிகம்:- திருமதி அருள்நங்கை

கணக்கியல்:- திரு. சௌந்தி

வர்த்தகம்:- திரு. லோகசிங்கம்

ஆரம்பம்:- 07-10-91 திங்கள் 8.00 a. m

(B/3225)

## ※ சிந்தனைக்கு ※

ஆக்கிரமிப்பைத் தொடங்கும் நாடு ஒவ்வொன்றும் தற்காப்புக்காகத் தான் நடவடிக்கை எடுப்பதாகச் சாதிப்பது வழக்கம்.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 02-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# ஐரோப்பாவில் அந்நியர் எதிர்ப்பு

ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான தாக்குதல் துன்புறுத்தல் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இத்தாக்குதல் துன்புறுத்தல் நடவடிக்கைகள் மனித உரிமைகளுக்குப் பெயர் பெற்ற சுவிற்சலாந்திலும்கூட நடைபெறத் தொடங்கியுள்ளன.

சில மாதங்களின் முன், இத்தாலிய எல்லையைக் கடக்க முயன்ற இலங்கைத் தமிழர் பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த வாரத்தில் ஜேர்மனியில் அகதிமுகாம்களின்மீது குண்டுத் தாக்குதலிலும், தீ வைப்பிலும் வலதுசாரிக் கட்சியினர் ஈடுபட்டனர். சுவிற்சலாந்திலும் அகதி முகாம்கள் மீது பெற்றோல் குண்டுகளையும், கற்களையும் "தேசபக்த முன்னணி" என்ற தேசியவாதிகள் வீசியுள்ளனர். இவ்வாறாக வெளிநாட்டவருக்கு எதிரான ஐரோப்பிய நாடுகளின் தாக்குதல்கள் விரிவடைந்து வருகின்றன. எதிர்காலத்திலும் இவை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவே ஒழிய குறைவடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக இல்லை.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்தபோது ஐரோப்பாவில் பல எல்லை மாற்றங்கள் ஏற்பட்டன. அத்தோடு உலகம் முதலாளித்துவம், கம்யூனிசம் என்ற சித்தாந்த அடிப்படையில் பிரிந்தது. இதன் காரணமாக எல்லை மாற்றங்களினால் பிரிக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேரவும், சித்தாந்த வேறுபாடு காரணமாக வெளியேறுவோரும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் பெறுவதற்கென சட்டங்களில் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆனால் இந்தச் சட்ட சலுகைகளை ஐரோப்பியர் மட்டுமல்ல மூன்றாம் உலகத்தவர்களும் பெருமளவில் பயன்படுத்திக்கொண்டமையால் அந்நாடுகளில் மூன்றாம் உலகத்தவரின் எண்ணிக்கை பெருகியது.

ஆனால், தற்பொழுது உலக அரசியற் சூழ்நிலை பெருமளவு மாறுபாடு அடைந்து விட்டது. கம்யூனிஸம் [illegible] சாய்ந்து விட்டது. கெடுபிடிப்போர் [illegible]

# விழுதுகள்

லக்ஸ்மன்,

படுவான் கரை மண்ணில் மரணம் உன்னை அணைத்துக் கொண்டது என்ற செய்தி எமக்குக் கிடைத்தது. உயிரற்ற உனது உடலிலிருந்து உனது தலையை வெட்டிக்கொண்டு சென்றார்களாம் என்பதைக் கேள்வியுற்றதும் விக்ரமின் நினைவுதான் வந்தது. விக்ரமைப் போலவே நீயும் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்திருக்கின்றாய் என்பதை உணர முடிந்தது.

மரணத்தால் உனது உடலை மட்டுமே எம்மிடமிருந்து பிரிக்க முடிந்தது. உன் உணர்வுகள் - உன்னோடு பழகிய அந்த நாட்கள் இவை எல்லாம் படுவான் கரை வயல்களைப் போலவே என்றும் பசுமையானவை. அவற்றை எம்மிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியும்? அரைக் காற்சட்டை அணிந்த சிறுவனாக "என்னை எப்ப றெனிங்குக்கு அனுப்புவீங்க?" என்று காசி அண்ணாவின் சகோதரர் சந்திரன் அவர்களை நீ நச்சரித்துக் கொண்டிருந்த நாட்களிலிருந்து எதிரிகளைக் கிலி கொள்ள வைக்கும் வீரனாக மட்டக்களப்பு வாழ் மக்களின் நேசனாக - நீ விளங்கிய ஏழு வருட காலத்தையும் நினைத்துக் கொள்கிறேன், சொட்டுச் சொட்டாக விழுந்த கண்ணீருடன் இம்மடலை உனக்கு வரைகிறேன். நான் நம்புகிறேன் - ஒவ்வொரு போராளியின் உள்ளுணர்வுகளுடன் ஒன்றிணைந்து இதனை நீ வாசிப்பாயென்று!

லக்ஸ்பிறே!

அப்படித்தான் உனக்கு நாங்கள் பெயர் வைத்தோம். அவ்வளவு சின்னப் பையன் நீ. காலப் போக்கில் லக்ஸ்பிறே என்ற பெயர் மறைய லக்ஸ்மனாக நீ பிரபலமானாய், 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி - அப்போதுதான் நீ எங்களுக்கு அறிமுகமானாய் - எஸ்.ரி.எவ் - பொலிஸ் வருகிறார்களா என்று பார்த்துச் சொல்லும் பணிதான் ஆரம்பத்தில் உனக்கு வழங்கப்பட்டது. உனது தோற்றம் எவரையும் சந்தேகப்பட வைக்காது என்பதால் இப்பணியில் உன்னை நாம் ஈடுபடுத்தினோம். இது தவிர்த்த

திறந்தவெளிச் சூழலில் நீ இடம் பெற்றிருந்தாய். அதுவே உனது முதல்களம். தொடர்ந்து குமரப்பாவுடன் படுவான்கரை மண்ணில் நீ செய்த சாதனைகள் பட்டியலிட முடியாதவை. அந்நாட்களிலேயே உன்னை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இனங்காட்டின. பாலையடி வெட்டையிலிருந்து மண்முனைத் துறை வரை கண்ணி வெடிகள் வெடிக்கும் போதும், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அந்நியப் படைகளின் சடலங்கள் ஏற்றப்படும் போதும் உனது பெயரையும் மக்கள் குசுகுசுத்துக் கொண்டனர். பின்னர் மட்டக்களப்பு நகருக்குள் உனது வேட்டொலிகள் கேட்டன. எங்கிருந்தோ வந்தவர்கள் ஊர்காவல்படை என்ற பெயரில் நகரில் காலடி எடுத்து வைத்தபோது ஒருநாள் தன்னந்தனியனாக அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டாய். அவர்களில் இருவர் பலியாக ஏனையோர் தலை தெறிக்க ஓடினர். அதன்பிறகு சிங்கள ஊர்காவல்படை பொலிஸ் நிலையத்திலிருந்து வெளிவர ஆசைப்படவில்லை. அதைப் போலவே தமிழ் மக்களை வதைத்து வந்த முஸ்லிம் ஊர்காவல்படையினரின் எண்ணிக்

இருந்தோம். அப்போது உனக்குக் குப்பி வழங்கப்படவில்லை ஐந்தாம் கட்டைச் சந்தி—கல்முனை— மட்டக்களப்பு வீதிவழியாக செல்லும் படையினரின் சகல வாகனங்களும் இந்தச் சந்தியில்தரித்து நின்று சிறிது நேரம் பயணிகளைச் சோதனையிடுவது வழக்கம். அன்று நாங்கள் இந்தச் சந்தியை நெருங்கினோம். எதைக் காணக் கூடாது என நினைத்தோமோ அதைக்கண்டோம். எங்களை நெருங்கிய அந்த ஜீப் தனது வேகத்தைக் குறைத்தது - அக்காட்சியை நான் நன்றாகப் பார்த்தேன்-



## லெப். லக்ஸ்மன்

கையை உனது துப்பாக்கி குறைத்தது - உனது தாக்குதலின் வேகம் பலியானோர் தொகை எஞ்சியோரை - சவூதி அரேபியாவுக்கும் பலமுறை கொழும்புக்கும் ஓடவைத்தது.

இந்தியப் படைகளுடனான போர் தொடங்கியதும். உனதுதிறமை மேலும்வெளிப்பட்டது. அன்றொரு நாள் நீ - [illegible] அலைந்துபோனை படித்து விளையாடிய - உன்னால் நேசிக்கப்பட்ட அந்தப் பரம நயினார் கோவில் முன்றலில் இந்தியப்படைகளின் காலடி பதிந்தது. உனது துப்பாக்கி வேட்டுகள் அவர்களைத் தடுத்து நிறுத்தின.

குதிக்க முயன்ற சிப்பாய்களை தடுத்து நிறுத்திய அந்த அதிகாரி ஜீப்பைச் செலுத்துமாறு சாரதியிடம் சைகை காட்டியதை. எமது அன்றைய மனநிலையை உனக்கு உணர்த்தத் தேவையில்லை. இருவருமே ஒரே மனநிலையில் தானே இருந்திருப்போம்? ஜீப் கொஞ்சம் கொஞ்சமாக எமது கண்ணிலிருந்து மறைந்தது. நிம்மதிப் பெருமூச்சுடன் நான் 'எங்களிட்டை [illegible] குப்பியிருக்கு. நாங்கள் கடிச்சிருப்பம் லக்ஸ்பிறே! நீ என்னடா செய்திருப்பாய்' என்று கேட்[illegible]

இருந்து போராளிகளைக் காப்பாற்ற தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தும் ஆரையம்பதி மக்கள் உனக்காக தம் வீட்டுக்குள்ளேயே சுரங்கம் அமைத்து உன்னைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். மிக நெருக்கடியான மூன்று மாதங்கள் இந்த சுரங்கத்தினுள்ளேயே நீ கழித்திருக்கிறாய் என்பதை அறிந்த போது—இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை மக்கள் காப்பாற்றி வரும்போது அந்தத் தகவலை எதிரியிடம் வழங்கியவனை......

சித்திரவதைகள்-சிறை வாழ்வு உன்னைப் புடம்போட்டன. எப்படியோ நீ விடுதலையானாய். தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட உனது சாதனைப் பட்டியல் நீண்டது.

உன்னை எத்தனை தடவை தான் மரணம் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது. மட்டக்களப்பு நகரில் ஒரு துரோகிக்கு தண்டனை வழங்கச் சென்றபோது அவனது காவலர்கள் பின்னால் வந்து அடித்தனர். நீ மயங்கினாய் உனது கை உடைந்தது. சம்பவத்தை அறிந்த இந்தியப்படை அந்த இடத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கும்போதே உனது நண்பர்கள் இருவர் வந்து எதிரிகளைத் தாக்கி அந்தத் தீவிலிருந்து உன்னை ஆற்றின் வழியாக தோணி மூலம் கொண்டு வந்தனர். (எப்படியோ அத்துரோகி உனது கையினாலேயே மாண்டான.) இன்னொரு தடவை துரோகிகளின் [illegible] ஒன்று உன் காலைத் துளைத்தது. ஆனால் இப்போது மட்டும் மரணம் உன்னை முத்தமிட ஏன் சம்மதித்தாய்?

சிறையிலிருந்து மீண்டதும் தாழங்குடாவில் சிறிலங்காப் படையினரின் கவச வாகனம் ஒன்றைத் தகர்த்தாய். மண்முனைத் துறையில் தேசத் துரோகிகளையும் சிறிலங்காப் படையினரையும் ஒழித்துக்கட்டினாய் பல பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றாய் தமிழீழத்திலும் தமிழீழத்துக்கு வெளியிலும் நீ செய்த சாதனைகள்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்தச் சம்பவங்களின் தொகுப்பு தமிழீழம் மலர்ந்த பின் மட்டுமே வெளிக்கொணரக் கூடியவை. இங்கு நான்

சித்தாந்த அடிப்படையில் பிரிந்தது. இதன் காரணமாக எல்லை மாற்றங்களினால் பிரிக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேரவும், சித்தாந்த வேறுபாடு காரணமாக வெளியேறுவோரும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் பெறுவதற்கென சட்டங்களில் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. ஆனால் இந்தச் சட்ட சலுகைகளை ஐரோப்பியர் மட்டுமல்ல மூன்றாம் உலகத்தவர்களும் பெருமளவில் பயன்படுத்திக்கொண்டமையால் அந்நாடுகளில் மூன்றாம் உலகத்தவரின் எண்ணிக்கை பெருகியது.

ஆனால், தற்பொழுது உலக அரசியற் சூழ்நிலை பெருமளவு மாறுபாடு அடைந்து விட்டது. கம்யூனிஸம் முற்றாகச் சாய்ந்து விட்டது. கெடுபிடிப்போர் ஓய்ந்து விட்டது. உலகெங்கிலுமே தேசிய இனப் போராட்டம் முனைப்புப் பெற்றுள்ளது. இந்நிலை ஐரோப்பாவில் மேலும் உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில், தேசிய எல்லை மாற்றங்களும் இடம்பெறத் தொடங்கி விட்டன. புதிய நாடுகள் உதயமாகியுள்ளன. இன்னும் சில உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இந்நிலை கம்யூனிச சித்தாந்தத்தின் கீழ் இருந்த கிழக்கு ஐரோப்பாவில் பெரிய அளவில் இடம்பெற்று வரினும் அவற்றின் தாக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஓரளவு பிரதிபலிக்கவும் தொடங்கியுள்ளன. இவற்றின் ஒரு சிறு தாக்கமே இந்த அகதிகள் மீதான தாக்குதல்களாகும். இங்கு பல்கிப் பெருகும் மூன்றாம் உலகத்தவரால் தமது நலன்களே பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தலை தூக்கும் அளவிற்கு நிலைமை சென்றுவிட்டது.

முதலாம் உலக மகாயுத்தம் முடிவடைந்து ஐரோப்பிய நாடுகள் பல சீரழிந்து போயிருந்த நிலையில் குறுகிய தேசியவாதத்தின் மூலமே அந்நாடுகளைக் கட்டியெழுப்புவதற்கு நாஜி ஹிட்லரும், பாசிச முசோலினியும் முனைந்தார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். 1933ஆம் ஆண்டு ஹிட்லர் ஆட்சிக்கு வரும்போது பசியும் பட்டினியுமாக அல்லலுற்ற ஜேர்மனி மூன்று வருடங்களின்பின் 1936 இல் உலகப் பெரும் போர் ஒன்றிற்கு தயாரான நிலையில் இருந்தது. அதற்குப் பயன்பட்டது ஹிட்லரின் இனவாதக் கோட்பாடேயாகும். இத்தாலியும் அவ்வாறானதொரு நிலையிலேயே வளர்ந்தது.

இன்று ஐரோப்பாவும் அதை ஒத்த நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. அன்றும் யூதருக்கு எதிரான நடவடிக்கை சோவியத் ரூசியாவிலேயே ஆரம்பித்து போலந்து ஊடாக ஜேர்மனியில் முடிவுற்றது. இன்றும் கிழக்கைரோப்பாவில் ஆரம்பித்துள்ள தேசிய இனங்களின் போராட்டமும், அந்நியர்களுக்கு எதிரான நடவடிக்கையும் மேற்கு ஐரோப்பாவில் தெரியத் தொடங்கியுள்ளன. அங்கு (மே. ஐரோப்பாவில்) ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை என்பதால், அச்சமூட்டுபவர்கள்மீது தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளன.

மேற்கு ஐரோப்பாவில் அன்று போல் அந்நியருக்கு எதிரான பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் உடன் ஏற்படாவிட்டாலும், எதிர்காலத்தில் முற்றாக அவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்று திட்டவட்டமாக அடித்துக் கூறிவிட முடியாது. இதனால் தோன்றும் அவலங்களை வெளிநாட்டவர் தவிர்த்துவிட முடியாது.

என்ற பெயர் மறைவு லக்ஸ்மணாக நீ பிரபலமானாய், 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி - அப்போதுதான் நீ எங்களுக்கு அறிமுகமானாய் - எஸ்.ரி.எவ் - பொலிஸ் வருகிறார்களா என்று பார்த்துச் சொல்லும் பணிதான் ஆரம்பத்தில் உனக்கு வழங்கப்பட்டது. உனது தோற்றம் எவரையும் சந்தேகப்பட வைக்காது என்பதால் இப்பணியில் உன்னை நாம் ஈடுபடுத்தினோம். இது தவிர்ந்த ஏனைய நேரங்களில் சந்திரண்ணையுடன் அட்டை போல் ஒட்டிக் கொள்வாய். "என்னை றெயினிங் காம்புக்கு அனுப்புங்கோ" என்று நீ அவரிடம் விடாப்பிடியாக நிற்கும் போது "உனக்கு வயசு வரட்டும் போறு" என்று நாங்கள் கூறுவோம். அப்போது உனது முகம் போகும் போக்கு! அது ஒரு தனி அழகுதான். அக்காட்சியை நினைக்கும்போது "தாலை தேசிக்கமீசைமுளைக்கத் தேவையில்லை" என்ற கவிதை வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன. எப்படியோ பாடசாலைச் சீருடையுடனேயே உன்னை பயிற்சி முகாமுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று.

பயிற்சி முகாமில் நீயும் சபேசனும்தான் சிறியவர்கள். இருவருமே ஒரே மாதிரியான குணாம்சத்தைக் கொண்டவர்கள். அமைதி-விசுவாசம்-ஒழுக்கம் இவற்றுக்கு நீங்கள் உதாரணமாகத் திகழ்ந்தீர்கள். பின்னாளில் உங்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்ட போது - ஓடிக் கொண்டிருந்த நீ களைத்து விழுவாய். அந்தக் கடுமையான பயிற்சியின் போதும் "கஷ்டமென்றால் வீட்டிற்குப் போகலாம்" என்று கூறும்போது நீ மறுப்பாய். அடுத்த நாள் இன்னும் சிறப்பாகச் செய்ய முயற்சிப்பாய். உன் உடல் நிலை அதற்கு இடம் தராது. ஆனால் உன் உறுதி குலைந்ததை மட்டும் நான் காணவில்லை.

பயிற்சி முடிந்ததும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டபோது அதை முறியடிக்க வரும் படையினரைத் தடுத்து

... அரேபியாவுக்கும் பலமுறை கொழும்புக்கும் ஓடவைத்தது.

இந்தியப் படைகளுடனான போர் தொடங்கியது. உனது திறமை மேலும் வெளிப்பட்டது. அன்றொரு நாள் நீ - கண் அளைந்து போலை படித்து விளையாடிய - உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பரமநயினார் கோயில் முன்றலில் - இந்தியப் படைகளின் கால்கள் பதிகிறது. உனது துப்பாக்கி வேட்டுகள் அவர்களைத் தடுத்து நிறுத்தின. பலியான சிப்பாயின் உடலை விட்டு அவர்கள் சிதறியோடினர். நீ அவர்களின் துப்பாக்கியுடன் தப்பிச் சென்றாய். இன்னொரு நாள் காத்தான்குடியில் வரிசையாக வந்து கொண்டிருந்த இந்தியப்படையினர் செல்லும் வரை காத்திருந்து கடைசியாக வந்த இந்திய ஜவான் மீது நீயும் சபேசனும் தாக்குதல் தொடுத்தீர்கள். உங்கள் துப்பாக்கி இயங்க மறுத்தது. அவனுடன் மல்லுக்கட்டினீர்கள். அவன் உன் கையைக் கடித்தான் நீங்கள் அவனது துப்பாக்கியாலேயே அவனது வாழ்வை முடித்தீர்கள். கைப்பற்றப்பட்ட துப்பாக்கியுடன் திரும்பி வந்தீர்கள். இப்படியே பல தாக்குதல்கள் ... ... ... ... ...

சிலகாலம் சென்ற இந்தியப் படையினரின் முற்றுகையின் போது நீ சயனைட் உட்கொண்டதாகவும் உன்னைச் சித்திரவதை செய்து உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் உன்னைக் காப்பாற்ற இந்தியப் படையினர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அறிந்தேன். அத்துடன் இந்தியப் படையினருடன் வந்த தேசத்துரோகியொருவனிடம் உன்னைச் சுட்டுவிடுமாறு நீ வேண்டிக் கொண்டதாகவும் அறிந்தேன். இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உனது விசுவாசம் எனக்குத் தெரிந்தது தானே. உனக்கு ஞாபகமிருக்கிறதா? நீ சிறுவனாக இருந்தபோது ஒருநாள் சந்திரண்ணாவுடன் கிரான்குளத்திலிருந்து சைக்கிளில் ஆரையம்பதிக்கு வந்துகொண்

... யதை, எமது அன்றைய மனநிலையை உனக்கு உணர்த்தத் தேவையில்லை. இருவருமே ஒரே மனநிலையில் தானே இருந்திருப்போம்? ஜீப் கொஞ்சம் கொஞ்சமாக எமது கண்ணிலிருந்து மறைந்தது. நிம்மதிப் பெருமூச்சுடன் நான் 'எங்கள வாரிட்டையும் குப்பியிருக்கு. நாங்கள் கடிச்சிருப்பம் லக்ஸ்பிறே! நீ என்னடா செய்திருப்பாய்' என்று கேட்டேன். அதற்கு நீ 'சந்திரண்ணையோட வாயைக் கடிச்சிருப்பன்' என்று சொன்னாய். அந்தச் சில கணநேரங்களுக்குள் நீ அந்த முடிவு தான் எடுத்திருந்தாய். அதனால் தான் உன்னால் அப்படிச் சொல்ல முடிந்தது. உனது பதிலைக் கேட்ட சந்திரண்ணை "நல்லவேளை லக்ஸ்பிறேட உயிரும் தப்பிச்சுது நம்மட வாயும் தப்பிச்சுது" என்றார் தொடர்ந்து எமது சிரிப்பொலியால் அந்தப் பகுதிப் பற்றைகளே குலுங்கின. என்ன இனிமையான நாட்களடா அவை!

பிடிபடும் வரை ஆரையம்பதி மக்கள் உன்னை எப்படிக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தபோது ஏதோ, ஒருவகை உணர்வு ஏற்பட்டது. இயல்பாகவே இராணுவ முற்றுகையில்

ஒன்றைத் தகர்த்தாய். மண்முனைத் துறையில் தேசத்துரோகிகளையும் சிறிலங்காப் படையினரையும் ஒழித்துக்கட்டினாய். பல பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றாய். தமிழீழத்திலும் தமிழீழத்துக்கு வெளியிலும் நீ செய்த சாதனைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்தச் சம்பவங்களின் தொகுப்பு தமிழீழம் மலர்ந்த பின் மட்டுமே வெளிக்கொணரக் கூடியவை. இங்கு நான் குறிப்பிட்டிருப்பது பாடமாக அமையக்கூடிய உன் வாழ்வின் சில பக்கங்களை மட்டுமே.

லக்ஸ்மன்! நீயும் நாங்களும் திரிந்த மண்ணை மீண்டும் மிதிக்கும்போது எங்களுக்குக் கவசமாயிருந்த கன்னாப் பற்றைகளும் எங்களைத் தாங்கிச் சென்ற தோணிகளும் நாங்கள் பிரிந்திருந்த காலத்தில் நீ செய்த சாதனைகளை - உன்னை நேசித்த மக்களைப்பற்றி எமக்கு கதை கதையாகக் கூறக் காத்திருக்கின்றன. அப்போது மீண்டும் எமது நினைவுகளை - உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வோம். அதுவரை தற்காலிகமாக விடை பெறுகின்றேன்.

அன்புடன் உனது
அறிவன்

## மலர் வெளியீட்டுக்கான ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் தமிழீழ பொருளாதாரத்தின் வளர்ச்சி விளக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மலர் ஒன்றினை வெளியிடவுள்ளது.

இதன் பொருட்டு எதிர்வரும் 11ஆம் திகதி காலை பத்துமணிக்கு பனைதென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் 25, பொன்னப்பா வீதி, வண்ணார் பண்ணையில் ஓர் கலந்துரையாடல் நடாத்த உள்ளது.

இந்த கலந்துரையாடலில் தெங்கு பனை அபிவிருத்தியில் ஆர்வமுள்ள ஆலோசகர்கள் புத்திஜீவிகள் அனைவரும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## வடலிகள் நாட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

பனைவளத்தைவிருத்திசெய்யும் நோக்குடன் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடலிகள் நாட்டப்படவுள்ளன.

இவற்றுக்குத் தேவையான மூவாயிரம் வடலிகளை வழங்க பனம் பொருள் அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது.

வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு

## பாடசாலைகளில் ஆசிரியர் தின விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தொகுதி பாடசாலைகள் இணைந்த ஆசிரியர் தின நிகழ்ச்சிகள் நாளை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மற்றும் சுழிபுரம், வட்டுக்கோட்டைப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தனித்தனியேயும் ஆசிரியர் தின நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆசிரியர் தின நிகழ்ச்சிகள் வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் முறையே இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிகளில் நடைபெறவுள்ளன. முதல் நாள் விளையாட்டுப் போட்டிகளும், இரண்டாம் நாள் ஏனைய நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (20)

விசேட

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து பொது முகாமையாளர்களும் தவறாது சமுகம் தரும்படி கூட்டுறவுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## ஒப்பந்த அடிப்படையில் டாக்டர்கள் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வைத்தியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஓய்வு பெற்ற உதவி மருத்துவ உத்தியோகஸ்தர்களை இவ் ஒப்பந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகளுக்கு பாக். ஆதரவளிக்க வேண்டாம்

### - சரத்பவார்

(டில்லி)

பஞ்சாப்பிலும் காஷ்மீரிலும் உள்ள தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கவேண்டாம் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத்பவார் பாகிஸ்தானிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கர்நாடகத்தில் பெல்காமில் சைனிக் மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது பாரத நாடு அயல் நாடொன்றுடன் போர் தொடுக்க விரும்பவில்லை என்றும் பாதுகாப்புத் துறை ஊழியர்களின் நலன்கள் பற்றி ஆராய கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வாண்டு இறுதியில் அதன் புதிய கொள்கைகள் வெளியாகும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பது

## இந்நாட்டிற்கு அதிமுக்கியம் வாய்ந்த விடயமாகும்

### - பாலாதம்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவியிலிருந்து தம்மை அகற்றும் நடவடிக்கையினைத் தோற்கடிப்பதற்கான தமது முயற்சியில் பிரேமதாசா வெற்றியடைகின்றாரோ, இல்லையோ, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியினையே இல்லா தொழிப்பதே இந்நாட்டு மக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த விடயம் என இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் (சீஎம்யூ) வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

சீஎம்யூவின் நிறைவேற்று சபையின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் பாலாதம்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முதற்தடவையாக ஜனாதிபதி தேர்தல் ஒன்று 1982 ஒக்டோபர் 20-ல் நடத்தப்படவுள்ளதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிவித்த போது ஜே. ஆர். அவர்களோ,

## பின்தங்கியோருக்கு 50 வீத ஒதுக்கீடு வேண்டும்

### தமிழக சட்டசபையில் தீர்மானம்

(கொழும்பு)

சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு 25சதவிகிதம் ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கொள்ளும் தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டப்பேரவை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தத் தீர்மா

# பிரித்தானிய ஆளும் கட்சி செல்வாக்கு இழந்துள்ளது?

(லண்டன்)

பிரித்தானியாவில் அண்மையில் இடம்பெற்ற பொது ஆய்வொன்றின் மூலம் தொழிலாளர் கட்சி ஆளும் கட்சியை விட இரண்டு வீதம் முன்னணியிலிருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் பொதுத்தேர்தல் சமீபத்தில் நடைபெறுமென்பதில் மேலும் நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் ''டெய்லி எக்ஸ்பிறஸ்'' தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்களுக்கிடையில் நடைபெற்ற பொது ஆய்வின் மூலம் இரண்டாம் முறையில் பிரதமர் ஜோன் மேயரின் கட்சி செல்வாக்கு இழப்பது தெரிய வந்துள்ளது.

1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரித்தானிய பொதுத்தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெறுவதையே மக்கள் விரும்புகின்றனர் என்றும் 'டெய்லி எக்ஸ்பிறஸ்' தெரிவித்துள்ளது.

பொருளாதார ஒத்துழைப்பு குறித்து

## 15 சோவியத் குடியரசுகள் கொள்கை இணக்கம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனிலுள்ள பதினைந்து குடியரசுகளின் தலைவர்களும் பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய ஒப்பந்தத்தை கொள்கையளவில் ஏற்க இணங்கியிருப்பதாக சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கை சந்தித்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கொர்பசேவ் இதனைத் தெரிவித்தார்.

வன்முறையால் பெற்றோரை

## இழந்த பிள்ளைகளின் விபரம் சேகரிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பல பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டும் பல முதியவர்கள் அநாதரவாக்கப்பட்டும் உள்ளனர். இத்தகையோரின் புனர்வாழ்வுக்கு உதவி செய்ய சில பொதுஸ்தாபனங்கள் தற்பொழுது முன்வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபரூடாக விபரம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் தங்கள் பகுதிக் கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை எதிர்வரும் 1991-10-10ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் கொடுக்குமாறு திட்டப் பணிப்பாளர் கெ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

நாகர் கோவிலில்

## வெளியே செல்வோருக்கான அனுமதிக் காரியாலயம்

வடமராட்சி கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் மக்கள் வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் அலுவலகம் ஒன்று சவேரியார் கோயிலடி, நாகர்கோவிலில் இயங்க ஆரம்பித்திருக்கின்றது. செவ்வாய், வியாழன் ஆகிய இரு அலுவலக நாட்களிலும் இங்கு பயணிகள் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## சர்வதேச சிறுவர் தினம்

(கொழும்பு)

உலகம் முழுவதும் நேற்று சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது. கொழும்பில் ஜோன். டி. சில்வா அரங்கில் சிறுவர் தினத்தையொட்டிய கலா

## வறியோர் - செல்வந்தர் இடைவெளி அதிகரிப்பு

(பாங்கொக்)

பல வருடங்களாக துரிதமான வளர்ச்சி ஏற்பட்டும் கூட ஆசிய-பசுபிக் பிராந்திய நாடுகளில் வறிய - செல்வந்த மக்களுக்கான இடைவெளி பெருமளவு அதிகரித்துள்ளது...டுள்ளது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கையில் வறிய மக்களின் எழுபத்தைந்து சதவிகித மானோர், ஆசியக் கண்டத்தில் வாழ்வதாகவும்

...என்றும் இவ்வாண்டு இறுதி ஜனாதிபதி பதவியினையே

...யிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

சி எம்யூவின் நிறைவேற்று சபையின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் பாலா தம்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

முதற்கட்டமாக ஜனாதிபதி தேர்தல் ஒன்று 1982 ஒக்டோபர் 20-ல் நடத்தப் படவுள்ளதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிவித்த போது ஜே. ஆர். அவர்களோ, அல்லது எந்த ஒரு அபேட்சகரோ ஜனாதிபதிக்குரிய சர்வாதிகார அதிகாரங்களை உண்மையான ஜனநாயக ரீதியான தேவைகளுக்கு உபயோகிப்பர் என நம்பமுடியாது. எனவே ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு எமது சங்கம் அழைப்பு விடுத்தது.

மேலும் அத்தியாவசிய சேவைகள் பிரமாணம் உட்பட ஜனாதிபதி மனித உரிமைகளைப் பாதிக்கின்ற அனைத்து அவசரகாலப் பிரமாணங்களையும் நீக்குமாறும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

...களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை எதிர்வரும் 1991-10-10ஆம் திகதி வியா...

...லடி நாகர்கோவிலில் இயங்க பிரிவு அறிவித்துள்ளது.

## பின்தங்கியோருக்கு 50 வீத ஒதுக்கீடு வேண்டும்

### தமிழக சட்டசபையில் தீர்மானம்

(கொழும்பு)

சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு 25சத விகிதம் ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டப்பேரவை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

## போலி ஒடிகொலோன்கள் விற்பனைக்கு வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

ஒடிகொலோனில் போலி வகைகளும் விற்பனையாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளும் முதியோர்களும் கூட உபயோகிக்கும் ஹேமா லிமிட்டெட் தயாரிப்பான பேபி சேர்மி ஒடிகொலோனைப் போல 110 மி. லீற்றர், 55 மி. லீற்றர் போத்தல்களில் அடைக்கப்பட்ட போலியான ஒடிகொலோன் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் விற்பனையாகின்றன எனத்தெரிய வருகின்றது.

இது பற்றி அவதானமாக இருக்கும்படி மருந்து தொழில்நுட்ப மற்றும் விநியோகப் பகுதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ் தென்னக்கோன் மருந்து உணவுப் பரிசோதகர்களைக் கடித மூலம் பணித்துள்ளார்.

அசலையும், போலியையும், மணத்திலிருந்து வித்தியாசம் தெரிந்து கொள்ளலாம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

---

யாழ். எம்பிக்கள்

திய வானொலி நிருபர் கருப்பசாமியிடம் கூறியுள்ளது.

சுயேட்சைக் குழுப் பாராளுமன்ற உறுப்பினர்கள்பாராளுமன்றம் வருவதை ஏனைய உறுப்பினர்கள் எதிர்க்க வேண்டும் எனப் பிரபல பௌத்த மதகுரு ஒருவர் கோரியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் பாம்பை மடியில் வைத்துக் கொள்ளும் உரிமை எவருக்கும் உண்டு. ஆனால் பாம்பு கடித்துக் கதறும் போது நாம் உதவிக்கு வரமாட்டோமென்று பௌத்த மதகுரு எல்ல குணவன்ச சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை எச்சரிக்கை செய்துள்ளார்.

## தமிழகத்தில் மேலும் இருபத்தொன்பது பேர் கைது

புலிகளுக்கு ஆயுதம் மற்றும் பெற்றோல் என்பன கடத்துவதாக குற்றம் சாட்டப்பட்டு மேலும் இருபத்தொன்பது பேர் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருபத்தொருபேர் இலங்கைத் தமிழர் எனவும் எட்டுப் பேர் இந்தியத் தமிழர் எனவும் தெரிய வருகின்றது. இவர்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைதாகியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் திரு. மெய்யப்பன் என்பவரும் இடம் பெற்றுள்ளாரெனச் செய்திகள் கூறுகின்றன.

---

சார்க்

டுள்ளனர். சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சார்க் வழிகாட்டல் குழுக் கூட்டம் நடந்தது. பாதுகாப்பு, போக்குவரத்து, தங்குமிட வசதி, உபசரிப்பு என்பன உள்ளிட்ட பதினொரு உப-குழுக்களின் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி எடுத்துரைத்தனர்.

## சீனாவின் 42-வது தேசிய தினம்

சீனாவின் நாற்பத்திரண்டாவது தேசிய தினம் நேற்று ஆகும். இதனை முன்னிட்டு சீனத் திரைப்பட விழா வொன்றை இலங்கை சீன நட்புறவுச் சங்கமும், சமூக கலாசார அமைச்சும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ளன. நேற்றுத் தொடங்கிய இவ் விழா இம்மாதம் எட்டாம் திகதி வரை நீடிக்கும்.

## சர்வதேச சிறுவர் தினம்

(கொழும்பு)

உலகம் முழுவதும் நேற்று சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது. கொழும்பில் யோன். டி. சில்வா அரங்கில் சிறுவர் தினத்தையொட்டிய கலாசார விழா நேற்றுத் தொடங்கியது. இந்த விழா நாளை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

யாழ், எம்பிக்களின்

யின் புகுவதை விடுதலைப் புலிகள் தடுத்துள்ளதாகவும் குறிப்பிடும் விமர்சகர்கள் சிங்களவர் தரப்பில் இந்தியா ஆதரவாளர்களான காமினி, லலித் குழுவினரின் முயற்சிகளை பாதிப்படையச் செய்துள்ளதோடு தமிழர் தரப்பில் உள்ள சில இந்திய ஆதரவு சக்திகளையும் ஓரம் தள்ளி விட்டனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

---

இந்தியாவின்

உலகுக்கு சமாதானத் தூது கொண்டு சென்றது இந்தியாவே. எங்கள் நாட்டைப் பாதுகாக்கவே இந்தியப்படை இங்கு வந்தது. ஆனால் இந்தியப்படையை திருப்பியனுப்ப பொதுமக்களின் விருப்பு வெறுப்பைப்பெற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் இங்கு வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கடற்படையைச்சேர்ந்த ஒருவரைக் கொண்டு தாக்கினர். இன்று புலிகளின் ஆதரவாளர்களான ஈரோஸ் இயக்கத்துடன் பிரேமதாசா பேச்சுவார்த்தை நடத்துகிறார். புலிகளின் ஆதரவுடன் அரசியல் குற்ற விசாரணைப்பிரேரணையைத் தோற்கடிக்கப்பார்க்கிறார். அரசு வழங்கிய சீமெந்தைக் கொண்டு புலிகள் பங்கர்களை அமைத்தனர். அந்தப் பங்கர்களை உடைக்கச் சென்றோர் பொலித்தீன் பைகளில் கிராமத்தை வந்து அடைகின்றனர் என்றும்பிரேமச்சந்திரா குறிப்பிட்டார்.

## வறியோர் - செல்வந்தர் இடைவெளி அதிகரிப்பு

(பாங்கொக்).

பல வருடங்களாக துரிதமான வளர்ச்சி ஏற்பட்டும் கூட ஆசிய-பசுபிக் பிராந்திய நாடுகளில் வறிய - செல்வந்த மக்களுக்கான இடைவெளி பெருமளவு அதிகரித்துள்ளது. என்று ஐ. நா. வின் ஆசிய-பசுபிக் வட்டார நாடுகள் சம்பந்தமான ஒரு ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கையில்வறிய மக்களின் எழுபத்தைந்து சதவிகித மானோர், ஆசியக் கண்டத்தில் வாழ்வதாகவும், அதில் பெரும்பங்கினர் இந்தியாவில் வாழ்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமரச முயற்சிகள் தொடர்ந்து நடக்கின்றன

(கொழும்பு)

லலித்-காமினி குழுவினரை மீண்டும் அரசாங்கத்திற்குள் கொண்டுவரும் முகமாக நடைபெறும் சமரச முயற்சியின் பலாபலன் நாளைக்குள் கைகூடிவிடும் என தாம் எதிர்பார்ப்பதாக ராஜாங்க அமைச்சர் எம். எல். ஏ. அபுசாலி தெரிவித்தார்.

பாராளுமன்ற முறைக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பது தொடர்பாக அரசியலமைப்பில் திருத்தம் ஒன்று கொண்டுவரலாம் என்பதே அரசாங்க உயர்பீடத்தின் நிலைப்பாடாகும்.

சர்வசன வாக்கெடுப்பை உயர்பீடம் நிராகரித்து விட்டதாம்.

---

21 இந்திய

துச் செல்லப்பட்டு அங்கிருந்து பஸ் மூலமாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு இந்தியத் தூதரகத்திடம்பாதுகாப்பாக ஒப்படைக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பின்னர் இம் மீனவர்களை இந்திய தூதரகம் சிறிலங்கா அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அனுப்பி வைக்கும்.

---

பிரதமர்

அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக அவர் இந்திய ஜனாதிபதி உள்துறைஅமைச்சர் மற்றும் பாதுகாப்புஅமைச்சர் சர்களையும்சந்தித்துப் பேசினார்.

---

இலவச

உறைபோட்டு அடுத்த ஆண்டில் பாவிக்கக் கூடிய முறையில் உபயோகிக்குமாறும், வகுப்பு ஆசிரியர்களைக் கொண்டு இதைக் கண்காணிக்குமாறும் அதிபர்கள் பணிக்கப் பட்டுள்ளார்கள்.

## பிரிவுபசார வைபவம்

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. சி. மகாலிங்கம் ஓய்வு பெறுவதை முன்னிட்டு ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரால் நடாத்தப்படும் பிரிவுபசார வைபவம் இன்று புதன்கிழமை கண்டாவளை பெரியகுளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கல்விப்பணிப்பாளர், அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மற்றும் கல்வி இலாகா ஊழியர்களால் பாராட்டு உபசாரங்கள் வழங்கப்படவுள்ளன.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.